அமுதப் பாடல்களால் கவர்ந்த பாரதி

வளர்நிலை– Level 6

தமிழுக்குத் தொண்டாற்றியவர்கள் பலர் அவர்களில் பாரதியார் தனக்கென்று தனியிடம் அமைத்துள்ளார். “யாமறிந்த மொழிதனிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்” என்று தமிழை வியந்து போற்றுகிறார் பாரதியார். பண்போடும் பணிவோடும் பகுக்கப்பட்ட பட்டறிவோடும் பெண்ணியம் போற்றுகின்ற பகுத்தறிவினை வளரச்செய்து ”பாட்டு திறத்தாலே இவ்வையகத்தை பாலித்திடவேண்டும்” என்று எழுச்சியோடு பாடினார்.

“ பெண்ணறிவை வளர்த்தால் வையம் பேதைமை யற்றிடுங் காணீர்” என்று பாடிய பாரதி பெண் விடுதலை, மூடநம்பிக்கைகள், சாதிய ஒடுக்கம், பெண்களுக்கெதிரான வன்முறை மற்றும் தீண்டாமை போன்றவற்றுக் கெதிராகக் கிளர்ந்தெழுந்த பாரதி. தனது சொற்களால் அடக்கு முறைகளை உடைத்தெறிந்தார். கற்றறியா பாமரர்க்கும் நற்கருத்துக்களை தன் இலகு நடை கவிதைகளால் கொண்டு போய்ச் சேர்த்த கவிஞராவார்.

”ஓடி விளையாடு பாப்பா நீ ஒய்ந்திருக்கலாகாது பாப்பா” என்பது பாரதியார் எழுதிய பலருக்கும் அறிமுகமான ஒரு குழந்தைகள் பாட்டு ஆகும். ”பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு” என்றார். இப்படிபட்ட விடுதலை உணர்வுமிக்க பாடல்களைப் பாடினார். ”ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்ற பாடல் மூலம் மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தினார். பாரதி என்ற மகாகவிஞன் இருண்டு கிடந்த மக்கள் வாழ்வில் தன் எழுத்துக்களால் வெளிச்சம் கொடுத்து ”இனி ஒரு விதி செய்வோம்” என்று பாடிய புதுமைமிகு கவிஞன். இவர் மக்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்த கவிஞன் என்றால் மிகையாகாது.

நன்றி, வணக்கம்!